## மாத்தறை அமெரிக்க கோர்னர் திறப்புவிழாவில் அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிஸ்ட் ஆற்றிய உரை

**பெப்ரவரி 26, 2019**

**முழுவிபரம் வருமாறு:**

இந்த அறை நிறைந்திருப்பதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியளிப்பதுடன், அமைச்சர் சமரவீரவின் அன்பான கருத்துக்களுக்கு நன்றிகளைக் கூற விரும்புகிறேன். எம்முடன் இணைந்து கொண்டமைக்கு வர்த்தக சம்மேளத்தின் தலைவர், சபை உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் பெற்றோருக்கும் நன்றிகள். அமெரிக்க கோர்னரை அங்குரார்ப்பணம் செய்வதற்கு வழங்கிய உதவிகள் மகிழ்ச்சியளிக்கின்றன. அமைச்சர் சுட்டிக்காட்டியதைப் போன்று இதனை அமைப்பதற்கு வருடக்கணக்காக செயற்பட்டிருப்பதுடன், இறுதியாக தென்பகுதி மக்களுக்காக இதனைக் கொண்டுவர முடிந்துள்ளது.

இந்த உறுதியான மையத்தின் ஊடாக எமது பங்காண்மையை உணர முடிந்துள்ளமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அமெரிக்க கோர்னர் இங்கு இருப்பதைவிட மேலும் மூன்று இடங்களில் காணப்படுகின்றன. நீங்கள் ஏற்கனவே வீடியோவில் பார்த்ததைப் போன்று கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் அவை அமைந்துள்ளன. மாத்தறையிலும் இந்த மையத்தை அமைக்காவிட்டால் எமது முயற்சி பூர்த்தியடைந்திருக்காது. தென் மாகாணம் மாத்திரமன்றி இலங்கை முழுவதிலும் ஒப்பிடுகையில் பெருமைக்குரிய நகராக இது விளங்குவதுடன், வர்த்தகம், தொழில்முயற்சி போன்றவற்றின் கேந்திர நிலையமாகவும், ருஹுணு பல்கலைக்கழகம் போன்ற முக்கியமான இடங்கள் அமைந்திருக்கும் இப்பகுதியில் இந்த மையத்தை அமைத்திருப்பதன் ஊடாக மாணவர்கள் அணுகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

அமைச்சர் சுட்டிக்காட்டியதைப் போன்று இலங்கையின் பாரிய ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா காணப்படுகிறது. விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்கள் இலங்கையில் உருவாவதற்கு அமெரிக்க வாடிக்கையாளர்கள் நேரடியாக ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். கடந்த பத்து வருடங்களில் இரு தரப்பு வர்த்தகம் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது 2007ஆம் ஆண்டு 410 பில்லியன் ரூபாவாக இருந்த வர்த்தகம் 2017ஆம் ஆண்டு 571 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான பங்காண்மை விரிவாக்கப்பட்டு, இரு தரப்பிலும் எதிர்காலத்தில் முதலீடுகள் அதிகரிக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இன்று இங்குள்ளவர்களில் சமூகத் தலைவர்கள் மற்றும் வர்த்தக உரிமையாளர்கள் இந்த எண்ணிக்கைக்கு கணிசமான பங்களிப்பைச் செலுத்தியிருப்பதுடன், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகிறது. புத்தாக்கம், கடும் உழைப்பு மற்றும் சிறந்த நோக்கம் என்பவற்றின் ஊடாக சுபீட்சம் நிறைந்த இலங்கையின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்துள்ள இளம் இலங்கையர்களுக்கு நீங்களே சிறந்த முன்னுதாரணங்களாக காணப்படுகிறீர்கள்.

அவ்வாறான உங்களது முயற்சிகளுக்கே அமெரிக்க கோர்னர் உதவிகளை வழங்கவுள்ளது. எமது இலவச திட்டங்கள் -இலவசம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்- இந்த நிலையத்தில் நீங்கள் உறுப்பினராக முடியும். அங்கத்துவத்தைப் பெறுவதற்கு எந்தக் கட்டணங்களும் அறவிடப்படாது. இங்குள்ள உள்ளூர் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எமது செயற்றிட்டங்கள் அமைத்திருப்பதுடன், இது பௌதீக ரீதியான இடத்தைவிட அதிகமானதாகும். இது எண்ணங்களின் காப்பகமாகும். தென் மாகாணத்தில் உள்ள இளைஞர்கள் தமது முன்மாதிரிகளை எமது 3டி பிரின்டரைப் பயன்படுத்தி உருவாக்குவதற்கு சந்தர்ப்பமாக அமையும். நீங்கள் இங்கு வரும்போது விளக்கிற்கு அருகில் அதனைக் கண்டிருப்பீர்கள். வர்த்தகத்துக்குத் தேவையான ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதற்கான இடமாகவும் இது அமைகிறது. அதன் மூலம் உங்கள் உற்பத்திகளை முதலீட்டாளர்களுக்கு சந்தைப்படுத்த முடியும். தமது வர்த்தகம் மற்றும் வர்த்தக நாமம் என்பற்றுக்கான குறியீடுகளை எவ்வாறு உருவாக்குவது, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி எவ்வாறு அவற்றைக் கட்டியெழுப்புவது என்பவற்றையும் அவர்கள் அறிந்துகொள்ள

முடியும். இதுவே நாம் அறுவடை செய்வதற்கு எதிர்பார்த்திருக்கும் சில திறன்கள் அல்லது முயற்சிகளாகும். மாத்தறை அமெரிக்க கோர்னரானது, தொழில்முனைவோரை ஊக்குவிப்பதுடன், இலங்கையின் திறன் மிக்க இளம் சமுதாயம் புத்தாக்கமான எண்ணங்களை உருவாக்குவதற்கும், அவர்களின் எண்ணங்களை யதார்த்தமாக்குவதற்கும் தேவையான இடம் மற்றும் வளங்களை வழங்குவதாகவும் அமையும்.

வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் வர்த்தக வாய்ப்புக்களை கூட்டுவதற்கான பல்வேறு திட்டங்களுக்கு உண்மையில் அமெரிக்கத் தூதரகம் ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. அமைச்சர் சிலவற்றை சுட்டிக்காட்டியிருந்ததுடன், அதில் மற்றுமொன்றை நான் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பின் யூலீட் திட்ட பிரதிநிதிகளை நாம் இன்று கொண்டுள்ளோம். இந்தத் திட்டமானது இலங்கையின் தொழில்முனைவோர் தொடர்பான கற்கையில் புரட்சியை உருவாக்கியிருப்பதுடன், இளம் தொழில்முனைவோரை கவரக்கூடிய வகையில் தொழில்முறைப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளையும் வழங்குகிறது. தென்மாகாணத்தில் உள்ள இளைஞர்கள், அமெரிக்க கோர்னர் மற்றும் யூலீட் திட்டம் என்பன இணைந்து தென்மாகாணத்தின் பொருளாதார செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கமுடியும்.

இங்கு காண்பிக்கப்பட்ட வீடியோவை நாம் தற்பொழுது பார்த்தோம், இலங்கையில் உள்ள அமெரிக்க கோர்னர்களில் மாத்தறையில் அமையப்பெற்றுள்ள இந்த அமெரிக்க கோர்னர் புதியதொரு உறுப்பினராக இணைந்துள்ளது. எமது இந்த கோர்னர்கள், இலங்கையில் உள்ள இளைஞர்கள் முல்தடவையாக வேறு மதத்தவர் அல்லது வேறு இனத்தவர் அல்லது வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களுடன் பழகி, நட்பை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அமெரிக்கர்கள் உலகின் பல்வேறு மூலைகளிலிருந்து வந்ததைப் போன்று இந்த இடமானது பல்வேறு பகுதிகளிலிருந்து வருபவர்கள் ஒன்றாக இணைந்து ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பாகவும் அமைகிறது. அமெரிக்க கோனர்கள் மூலம் இலங்கையில் உள்ள இளம் சமுதாயத்தினர் ஒருவர் பற்றி ஒருவர், வித்தியாசமான கலாசாரம் என்பவற்றை புரிந்துகொண்டு நாட்டின் அபிவிருத்தி, சமாதானம், ஜனநாயகப் பல்வகைமை போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் வழி ஏற்படுத்துகிறது.

இங்கு அமெரிக்க கோர்னரை திறப்பதன் மூலம் சகல இலங்கையருடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் விருப்பம் அடையாளப்படுத்தப்படுகிறது. வாஷிங்டன் டீ.சி. முழு அமெரிக்காவையும் பிரதிநிதித்துவப் படுத்தாது, அதேபோல கொழும்பு முழு இலங்கையாக அமையாது. நாங்கள் பகிர்ந்துள்ள ஆர்வங்கள் மற்றும் மதிப்புக்கள் குறித்து இலங்கை முழுவதிலும் கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும் என்பதை விரும்புகின்றோம். சகல இடங்களிலும் வாய்ப்புக்கள் மற்றும் சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்த இணைந்து செயற்பட விரும்புகின்றோம்.

இங்கு இணைந்து கொண்டமைக்காக மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். அமெரிக்க கோர்னர் தொடர்பில் நீங்கள் உங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அயலவர்களிடம் தெரியப்படுத்துவீர்கள் என நம்புகின்றேன். இது உங்களுக்கான இடம், இங்கு நீங்கள் எதனை உருவாக்கப் போகின்றீர்கள் என்பதைப் பார்ப்பதற்கு பொறுமையாக இருக்கமுடியாது. இத்திட்டம் வெற்றியளிப்பதற்கும், எதிர்காலத்தில் வழங்கவிருக்கும் உதவிகளுக்கும் வர்த்தக சம்மேளனத்துக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகள். உங்கள் பங்காண்மை கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதுடன், சமூகத்துடன் இணைந்தமை மகிழ்ச்சியளிக்கிறது.

நன்றி